23.06.2025 அ.வ.எண். 327/2023 PW–1

| | |
|---|---|
| பெயர் | ராமலிங்கம் |
| த.பெ. | பழனிக்கவுண்டர் |

**<u>சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

இந்த வழக்கு க.ச. எண். 700/1A காலைக்கு மட்டும் தான் உட்பட்டது என்றால் சரிதான். அந்த க.ச.எண். 700/1A என்பது கிழமேல் தடம் என்றால் சரிதான். இது வருவாய் துறை ஆவணங்களில் நிலவியல் தடம் என்று தனியாக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தடம் கரியாம்பாளையம் – பொன்னேகவுண்டன்புதூர் தார் ரோட்டில் இருந்து கிழேக்கே பிரிந்து செல்கிறது என்றால் சரிதான். அங்கிருந்து பட்டா பூமிகளுக்கு சென்றடைகிறது என்றால் சரிதான். இந்த தடம் மேல்புரத்தின் ஆரம்ப பகுதி, நடுப்புறத்தில் எல்லாம் குறிப்பிடப்பட்ட அளவுகளோடு தான் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கின் ஒரு தரப்பினரான ரங்கராஜ் என்பவருக்கு தடத்தின் கிழபுரத்தில் உள்ள க.எண். 703 பூமி பாத்தியம் என்றால் சரிதான். அந்த பூமி ரங்கராஜின் தந்தை சின்னச்சாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அதற்கு பின்னிட்டு அவர் உயில் எழுதி வைத்து அவரது இரண்டு மகன்கள் அனுபவித்து வருகிறார்கள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. க.ச.எண். 703ல் அவர்கள் அண்ணன் தம்பிகள் தான் விவசாயம் செய்து வருகிறார்கள் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. ஆனால் அந்த பூமியில் விவசாயம் நடந்து வருவது மட்டும் எனக்கு தெரியும்.

(**பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது**)

Sd/–V.Monika
மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர்,
அன்னூர்.

| |
|---|
| Take down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by the deponent to be correct. |